இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 124 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 28 – ஞாயிற்றுக்கிழமை 14 டிசம்பர் 2025 – சென்னை 36 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 124 : Thiruvalluvar Year - 2056 - Karthigai 28 - Sunday 14 December 2025 - Chennai 36 Pages ₹ 5.00

## பெரு மாநிலங்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளி

# பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, டிச.14-**

**“பெரு மாநிலங்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளி பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.**

திராவிட மாடல் ஆட்சியில், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (#GSDP) 2021-22 நிதியாண்டில் ரூ.20.72 லட்சம் கோடி ஆக இருந்தது, அது 2024-25 நிதியாண்டில் ரூ.31.16 லட்சம் கோடி ஆக உயர்ந்துள்ளது. அதாவது 50% அபார வளர்ச்சியை 4 ஆண்டுகளில் எட்டியுள்ளது.

தனிநபர் வருமானம் 2021-22 நிதியாண்டில் ரூ.2,42,339 ஆக இருந்தது, அது 2024-25 நிதியாண்டில் ரூ.3,61,619 ஆக உயர்ந்துள்ளது. அதாவது 49% அபார வளர்ச்சியை 4 ஆண்டுகளில் எட்டியுள்ளது.

### இந்தியாவிற்கே வழிகாட்டும் திராவிட மாடல் பொருளாதாரம்!

திராவிட மாடல் ஆட்சியின்,மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) மற்றும் தனிநபர் வருமானம் ஆகியவை அபார வளர்ச்சியை எட்டியுள்ளது . மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சி: 2021-22 முதல் 2024-25 வரையிலான காலத்தில் 50% வளர்ச்சி அடைந்துள்ளது. தனிநபர் வருமானம் (Per Capita Growth) வளர்ச்சி: இதே காலகட்டத்தில் 49% வளர்ச்சி அடைந்துள்ளது.

கடந்த நிதியாண்டைக் காட்டிலும் 15.98% வளர்ச்சியை அடைந்துள்ளது. மேலும் இந்தியாவிலே இதுவரை எந்த மாநிலமும் இந்த வளர்ச்சியை எட்டவில்லை என்பதும் முதல்



முறையாக தமிழ்நாடு மட்டுமே இந்த நிலையை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் இந்த அபரிமித பொருளாதார வளர்ச்சி, மத்திய அரசுத் தரவுகள் மூலமே தெரியவரும் இனிய வேளையில், அதனையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**வானுயர் GSDP வளர்ச்சி விகிதம்; பெருமாநிலங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிய தமிழ்நாட்டின் சாதனை!**

**பரப்பளவில் பெரிய மாநிலம் இல்லை, மக்கள் தொகையிலும் பெரிய மாநிலம் இல்லை, ஒன்றிய அரசின் ஆதரவு பெருமளவில் இல்லை! இருந்தும் GSDP வளர்ச்சியில் 16%உடன் தமிழ்நாடு நம்பர் ஒன் என்றால் அதுதான் திராவிட மாடல்.**

**கடந்த மூன்றாண்டுகளில் நிலையான, அதே வேளையில் மிக அதிகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது தமிழ்நாடுதான்! சொல்வது நாம் அல்ல, இந்திய ரிசர்வ் வங்கி!**




**2021-2025 வரையிலான நிதியாண்டுகளில் மட்டுமே 10.5 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது தமிழ்நாட்டின் பொருளாதாரம்! மொத்த மதிப்பு ரூ.31.19 லட்சம் கோடி!**




### தனி நபர் வருமான உயர்விலும் வெற்றி!

**நம்மோடு ஒப்பிடத்தக்க, வளர்ந்த பெரிய மாநிலங்களான, மகாராஷ்ட்டிரா, கர்நாடகம், குஜராத் போன்றவற்றை விஞ்சிய இந்த வளர்ச்சி விகிதம் - தமிழ்நாட்டுக்கே சொந்தம்!**

**தனிநபர் வருமான உயர்விலும் தொடர்கிறது தமிழ்நாட்டின் வெற்றி!**

**2031ஆம் ஆண்டு திராவிட மாடல் 2.0 நிறைவுறும்போது, இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தில் இல்லாத துறையே இல்லை என்ற நிலையை உருவாக்கிக் காட்டுவேன்! இது உறுதி!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் – திருவண்ணாமலையில் இன்று

# கழக இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

## நிகழ்ச்சியில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

**திருவண்ணாமலை, டிச.14-**

**திருவண்ணாமலையில் இன்று கழக இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் பங்கேற்றுச் சிறப்புரையாற்றுகின்றனர்.**

1980இல் இன்றைய கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட கழக இளைஞர் அணி, கழகத்துக்கு வலிமை சேர்த்து, களத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இன்று தமிழ்நாடு முழு வதும் தலைமைக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எனக் கணிசமான கழகச் செயல் வீரர்கள் இளைஞர் அணிப் பாசறையில் பட்டை தீட்டப்பட்டவர்களே!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கைகளைத் திசையெங்கும் கொண்டு செல்லும் கருத்தியல் பணிகள் ஒருபுறம், கட்டமைப்பை வலுப்படுத்தி கழகத்தின் வெற்றிகளுக்குத் துணைநிற்கும் அரசியல் பணிகள் இன்னொருபுறம் என்று இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கிறது இளைஞர் அணி.

மாநிலம், மாவட்டம், மாநகரம், பேரூர், ஒன்றியம், கிளை, வட்டம் என்று தமிழ்நாட்டின் எல்லாத் திசை



களிலும் வேர்விட்டிருக்கிறது கழக இளைஞர் அணி. வழக்கமான நிர்வாக அமைப்புடன் இந்த ஆண்டு இரண்டு புதிய முன்னெடுப்புகளையும் கழக இளைஞர் அணி மேற்கொண்டிருக்கிறது.

ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர, பகுதி, பேரூர், வார்டுகளிலும் அனைத்துப் பாகங்களிலும் இளைஞர் அணிக்கு நிர்வாகிகள் என இப்படி, கழகத் தலைவர் வழிகாட்டலில், தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் இளைஞர் அணி நிர்வாகிகளைக் கொண்ட வலுவான அணியாக விளங்குகிறது கழக இளைஞர் அணி.

இப்படி, 5 லட்சம் நிர்வாகிகள், 50 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்று வலுவான கட்டமைப்பைக் கொண்டு செயல்படும் இளைஞர் அமைப்பு, இந்திய அளவில் தி.மு.க. இளைஞர் அணி மட்டுமே!

இப்படி, நியமிக்கப்பட்ட 5 லட்சம் நிர்வாகிகளை ஒன்றிணைத்து மண்டலம்தோறும் நிர்வாகிகள் சந்திப்பை நடத்த வேண்டும் என்ற கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்பேரில், முதற்கட்டமாக வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு இன்று (14.12.2025 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 4.00 மணியளவில் திருவண்ணாமலை கலைஞர் திடலில் நடைபெறுகிறது.

1.30 லட்சம் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூடும் பிரமாண்ட நிகழ்ச்சியாக நடக்கவிருக்கும் இந்த வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பில் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் சிறப்புரை ஆற்றவிருக்கிறார்.